Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 04, 2023

செவ்வாய்க்கிழமை ஜூலை 04, 2023 | ஒளி: 09 கதிர் 032 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 3,000ஐ விட குறைகிறது சிலிண்டர் விலை




12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 3 ஆயிரம் ரூபாயை விட குறைவடையும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### சீனித் தொழிற்சாலைக்கு சீனா முதலீடு?

# இந்தியாவுக்கு எதிரான எதையும் ஏற்கோம்

**அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு: நாம் ஒரு போராட்ட இயக்கம் என்கிறார்**



■ க. அகரன்

வவுனியாவில் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள சீனித் தொழிற்சாலைக்கு சீனா முதலீடு செய்வதாகக் கூறப்படுவதாகவும் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம் என்றும் இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### விசேட வைத்தியர்களின்


## ஓய்வு வயதெல்லை குறித்து அமைச்சரவை பத்திரம்



விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவை பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது அதிகரித்து வரும் வைத்தியர்களுக்கான வெற்றிடங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சின்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## தாமரை பறிக்கச் சென்றவர் தண்ணீரில் மூழ்கி மரணம்

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - நவகத்தேகம கொன்கடவல குளத்தில் தாமரை மலர்களைப் பறிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.நவகத்தேக, கொன்கடவல பகுதியைச் சேர்ந்த தென்னகோன் முதியன்சேலாகே சிறிசேன (வயது 60) என்பவரே மரணித்துள்ளார். இவர், ஒரு பிள்ளையின் தந்தையாவார்.

தொடர்ச்சி P2

### நிர்மாணத் கைத்தொழிலைப் பாதுகாக்க

## உத்திகளை தயாரித்து வருகிறது அரசாங்கம்




தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் இந்த வேளையில், இந்நாட்டின் நிர்மாணத் கைத்தொழிலைப் பாதுகாத்து, அந்தக் கைத்தொழிலாளர்களை வெளிநாட்டு வர்த்தகங்களுக்கு வழிநடத்துவது காலத்தின் தேவையாக உணரப்பட்டுள்ளதுடன், அதற்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால உத்திகளை அரசாங்கம் தயாரித்து வருகிறது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இந்தியாவின் சிறந்த பௌத்த மரபை பிரதிபலிக்கும் கண்காட்சி

இந்தியாவின் உயர்வான பௌத்த மரபைக் குறிக்கும் முகமாக கொழும்பிலுள்ள கங்காராமை விகாரையில் புனித எசல போயா தினத்தன்று இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் விசேட கண்காட்சி ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டது. அறிவு, வழிகாட்டல் மற்றும் ஞானம் ஆகியவற்றைத் தரும் ஆன்மீக நெறியாளர்கள் அல்லது குருமாரைக் கௌரவிக்கும் முகமாக இந்தியாவில் கொண்டாடப்படும் குரு பூர்ணிமா பண்டிகைக்கு சமாந்தரமாக எசல போயா தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. இப்போயா தினத்திலேயே இந்தியாவின் சர்நாத்தில் புத்தபெருமான தனது முதலாவது பிரசங்கத்தை நடத்தியிருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுரைக்கமைய நாட்டிற்குள் மருத்துப் பொருட்களுக்கான தற்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு தற்போது முன்னெடுத்து வருகின்றது என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அன்று ஏளனப்படுத்தியோர் இன்று எதிர்க்கின்றனர்

■ உமாமகேஸ்வரி



அன்று ஏளனப்படுத்தியவர்கள் இன்று எம்மை எதிர்க்கின்றனர் என்றும் இதுதான் இன்றைய அரசியல் எனவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தன, இன்றைய சூழ்நிலையில் எம்மிடையே அரசியல் பேதம் கிடையாது என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை

## மீட்டெடுத்த சிறந்த தலைவரே ரணில்



■ எஸ்.கணேசன்

துன்பத்தின் பிடிக்குள் சிக்கியிருந்த நாட்டு மக்களை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானியுமான சாகல ரத்னாயக்க புகழாரம் சூட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதிக்கான உறுப்பினர்களை தெரிவு செய்யும் கூட்டம் ஹட்டன் நகரில் உள்ள தனியார் மண்டபமொன்றில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

### தோட்டத் தொழிலாளர்களின்

## இறுதி சேமிப்பில் கை வைப்பதை ஏற்கமுடியாது

■ எம்.கிருஸ்ணா



தேசிய கடன் மறுசீரமைப்பின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களின் இறுதி சேமிப்பு மீது பலவந்தமாக கை வைக்கப்படுவதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தன்னினச் சேர்க்கையாளருக்கு புலிகள் ஆதரவு வழங்கவில்லை




■ பாறுக் ஷிஹான்

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட தன்னினச் சேர்க்கையாளருக்கு ஆதரவு வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் தங்களுடைய அரசியல் இலாபங்களுக்காகவும் தங்களது கட்சியை வளர்ப்பதற்காகவும் இவ்வாறான செயற்பாடுகளை சமூகத்தின் மத்தியில் திணிக்கின்றனர் என்றும் இலங்கை அரசாங்க பொது ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் வருத்தம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நாட்டில் சில பகுதிகளில் நீரில் மூழ்கி நால்வர் மரணம் இருவர் மாயம்



நாட்டின் சில பகுதிகளில் உள்ள கடற்கரை மற்றும் ஆறுகளில் நீராடச் சென்ற நால்வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், மீன்பிடிக்கச் சென்ற இருவர் காணாமற் போயுள்ளனர்.

நுரைச்சோலைக்கு சுற்றுலா சென்ற மதுரங்குளியைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் எத்தலய கடற்கரையில் நீராடிய போது 21 மற்றும் 66 வயதுடைய இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்தியாவுக்கு...

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் திங்கட்கிழமை (03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் சீனித்தொழிற்சாலை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “சீனித் தொழிற்சாலை தொடர்பில் 4 ஆவது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களை சொல்லவில்லை. ஆனால் பலர் குத்திமுறிகிறார்கள். சிங்கள குடியேற்றம் வரும் எனவும், சீனா முதலீடு எனவும் கூறுகிறார்கள்.

எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலை இயக்கம் சீனாவின் முதலீட்டை அதாவது இந்தியாவுக்கு எதிரான முதலீட்டை ஏற்கமாட்டோம். இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. சீனா முதலீட்டை எதிர்போம். நாம் ஒரு போராட்ட இயக்கம். நிச்சயமாக சிங்கள குடியேற்றங்களையும் எதிர்ப்போம்.

சீனித் தொழிற்சாலை முறையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் பல பேர் குத்தி முறிகிறார்கள். வவுனியா மக்களோ அல்லது வவுனியாவில் உள்ள அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கருத்து சொல்லவில்லை. வவுனியாவுக்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்களது மக்களின் கருத்துக்களையும், இங்குள்ள அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரது கருத்துக்களையும் பெற்ற பின் தான் இங்கு கொண்டு வருவதா இல்லையா என முடிவெடுப்போம்.

ஆகவே, தயவுசெய்து யாரும் குத்தி முறியவேண்டாம். சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூப்பிக்க முடிந்தால் நிரூப்பிக்கவும். அதைவிடுத்து சும்மா குத்திமுறிவதால் அர்த்தமில்லை.

இந்த தொழிற்சாலை தாய்லாந்து நிறுவனத்தின் முதலீடு. இதில் தமிழீழ விடுதலை இயக்கம் எந்தப் பங்காளியும் இல்லை. இது தென்னிலங்கைக்கு செல்வதற்கான வாய்ப்பை தடுத்து நிறுத்தி வடக்கிற்கு கொண்டு வருவதற்கான ஒரு முயற்சியே. இதற்கான பங்காளிகளாக நாம் இருக்கப்போவதில்லை.

முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாடே ஒழிய பங்காளர் இல்லை. மக்களின் நலன், விவசாயிகளின் நலன் என்பன பற்றி கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்ல இருகின்றோம். வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங்கள இடத்துக்கு போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்று தான் நாம் முடிவெடுப்போம்.

எங்களைப் பொறுத்தவரை எமது தேசத்தில் முதலீடுகள் நடைபெற வேண்டும். ஆகவே இதில் முதலீட்டை பார்ப்பதை விட்டுவிட்டு கனவுகளோடு பார்க்க வேண்டாம். ஆதாரம் இல்லாத கருத்துக்களை கூற வேண்டாம்.

வவுனியா மக்கள் ஆதரவு தந்தால் கொண்டு வர முயற்சி செய்வோம். அவர்கள் வேணாம் என்றாம் திருப்பி அனுப்புவோம். தமிழீழ விடுதலை இயக்கம் முதலீட்டை கொண்டு வர முயற்சிக்கின்றது என்பதற்காக சிலர் இதை எதிர்க்கிறார்கள். இது எங்களது ஒரு முயற்சி அவ்வளவு தான். இதை பற்றி யாரும் குத்தி முறிய வேண்டாம். நாமும் குத்தி முறியப்போவதில்லை என தெரிவித்தார்.

# 3,000ஐ விட குறைகிறது சிலிண்டர் விலை




இன்றையதினம் (04) விலைக்குறைப்பு குறித்து அறிவிக்கப்படும் என்றும் இது நிறுவனத்தினால் அறிவிக்கப்படும் 4ஆவது விலைக்குறைப்பு என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் மாதம் 5ஆம் திகதியன்று, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டது.

5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 181 ரூபாயாலும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தது.

12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 3,186 ரூபாயாகவும், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 1,281 ரூபாயாகவும், 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 598 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உத்திகளை...

கட்டுமானத் துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் கட்டுமானத் துறையில் தேசிய விழாவான தேசிய கட்டுமான விருதுகள் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு 07, சவ்சிறிபாயவில் அமைந்துள்ள நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (30) 31 ஆவது தடவையாக இவ்விழா நடைபெற்றது.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக விருது வழங்கும் விழாவை இரண்டு ஆண்டுகளாக நடத்த முடியவில்லை.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில், சிவில் இன்ஜினியரிங் திட்டங்கள், கட்டிட திட்டங்கள், மின் மற்றும் இயந்திர கட்டுமானம், பசுமை கட்டுமானம் மற்றும் பிராந்திய திட்டங்கள் ஆகிய பிரிவுகளில் 65 விருதுகள் இங்கு வழங்கப்பட்டன.

இந்த தேசிய விருது விழாவின் முதன்மை நோக்கம், இலங்கையில் நிர்மாணத்துறையை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாணத்துறையில் சிறந்து விளங்குபவர்களை இனங்கண்டு, அந்த சிறப்பை அடைவதற்கு பயன்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பிடுவதும், இலங்கையின் நிர்மாணத்துறையின் நிபுணத்துவம் மற்றும் சிறப்பை மதிப்பிடுவதும் ஆகும்.

நிர்மாணக் கைத்தொழில் இலங்கையின் இரண்டாவது பெரிய கைத்தொழில்துறையாகும். உள்நாட்டில், இது தற்போது நாட்டின் பொருளாதாரத்திற்கு கிட்டத்தட்ட 8% பங்களிக்கிறது,

2014 /33 ஆம் இலக்க நிர்மாணத் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டமானது, நிர்மாணத் துறையில் விரும்பிய இலக்குகளை அடைவதற்கும் அதனை மேலும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் நிர்மாணத் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையை நிறுவியது. உலகளாவிய தரத்திற்கு ஏற்ப இலங்கையில் நம்பகமான மற்றும் திறமையான கட்டுமானத்துறையை உருவாக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை முயற்சி எடுத்து வருகிறது.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணப்படும் இந்த வேளையில், இந்நாட்டின் நிர்மாணத் கைத்தொழிலைப் பாதுகாத்து, அந்தக் கைத்தொழிலாளர்களை வெளிநாட்டு வர்த்தகங்களுக்கு வழிநடத்துவது காலத்தின் தேவையாக உணரப்பட்டுள்ளது.

அதற்கான குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால உத்திகளை அரசு தயாரித்து வருகிறது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தியின் மூலம், மிகவும் நம்பிக்கையான மாற்றத்தையும், நாட்டின் விரைவான வளர்ச்சி இலக்குகளையும் அடைவதற்கான பாதை திறக்கப்பட்டுள்ளது.

# மீட்டெடுத்த...

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் இதுவரை 4 லட்சத்து 91 ஆயிரம் மேன்முறையீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும், 6 ஆயிரத்து 773 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் கூறினார்.

குறித்த மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பில் பரிசீலனை நடத்தப்பட்டு குறைந்த வருமானம் பெறும் பயனாளிகளுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் அஸ்வசும திட்டத்தின் ஊடாக நிவாரணம் வழங்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியை கிராமிய மட்டத்தில் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்” என்றார்.

# ஓய்வு வயதெல்லை குறித்து அமைச்சரவை பத்திரம்

விசேட வைத்திய நிபுணர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சினால் கடந்த வாரம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இந்த தீர்மானம் குறித்து கடந்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தமது கட்டாய ஓய்வு வயதை 60 ஆகக் குறைக்கும் 17.10.2022 திகதியிடப்பட்ட அமைச்சரவையின் தீர்மானத்தை எதிர்த்து 176 விசேட வைத்திய நிபுணர்களால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, விசேட வைத்தியர் நிபுணர்களின் ஓய்வுபெறும் வயதை 63 ஆக உயர்த்துவதற்கு சுகாதார அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு, கடந்த 27ஆம் திகதி அறிவித்தார்.

# இறுதி சேமிப்பில்...

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, “ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தேசிய கடன் மறுசீரமைப்பினால் தனியார் துறையில் தொழில் புரிகின்ற ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பரவலாக கருத்துக்கள் கூறப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் தமது அன்றாட உழைப்பின் ஊடாக இறுதிக் காலத்துக்கு சேமித்து வைத்திருக்கின்ற தோட்டத்து தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தமக்கு கிடைக்காமல் போய்விடுமோ என்று தொழிலாளர்கள் தற்போது அச்சம் கொண்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சேமிப்புக்கான 9 வீத வட்டிக்கும் எவ்வித உத்தரவாதம் இல்லை என்பது தொடர்பிலும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் தேசிய கடன் மறுசீரமைப்பினால் இந்த நாட்டில் தனியார் துறையைச் சேர்ந்த 25 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்படைய உள்ள அதே வேளை அவர்களுள் உள்ளடக்கப்படுகின்ற தோட்டத் தொழிலாளர்களும் மிக மோசமான நிலையில் பாதிப்படைவார்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும் பொருளியல் ஆய்வாளர்களும் கருத்து கூற தொடங்கியுள்ளனர்.

எனவே தோட்டத் தொழிலாளர்களின் இறுதி சேமிப்பாக கருதப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய தொகைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்பதை தேசிய கடன் மறுசீரமைப்புக்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் பதில் கூற வேண்டும்” என்றார்.

# தாமரை பறிக்கச்...

தனது ஒரே பிள்ளையான 25 வயதுடைய மகன் நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்ட நிலையில் தொடர்ச்சியாக ஆயுர்வேத வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சை பெற்று வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வைத்திய தேவைக்காக தாமரை மலர்கள் தேவைப்பட்டதால், அதனை பறிப்பதற்காக நவகத்தேகம கொன்கடவல குளத்திற்கு சென்ற போதே அவர் அங்கு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த வைத்தியத்துக்குத் தேவையான தாமரை மலர்கள் மட்டுமே பறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன், மேலும் தேவையான அனைத்து பொருட்களும் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குடும்பஸ்தர் தாமரை மலர்களை பறிப்பதற்காக தனது வீட்டிலிருந்து குளத்துக்குச் சைக்கிளில் வந்ததாகவும், பின் தனது சைக்கிளை குளத்திற்கு பக்கத்தில் உள்ள வீடு ஒன்றில் வைத்துவிட்டு பூ பறிக்க சென்றதாகவும் கூறப்படுகிறது.

நீண்ட நேரமாகியும் குறித்த நபர் வருகை தராத்தால், அந்த பகுதியில் உள்ள மக்கள் குளத்தில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போது, அந்த நபர் உயிரிழந்த நிலையில் சேற்றுக்குள் புதையுண்டு காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அன்று ஏளனப்படுத்தியோர் இன்று எதிர்க்கின்றனர்

இரத்தினபுரி தேர்தல் தொகுதியின் ஐ.தே.க அமைப்பாளர் குழு கூட்டம் இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“‘அஸ்வெசும’ நிவாரண கொடுப்பனவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மைய கணக்கெடுப்பின்படி 28 இலட்சம் பேர் அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதனை நாம் 40 இலட்சம் வரை அதிகரிக்க முடியும் அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெறப்படும் அல்லது பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டும். உண்மைத் கவல்களை வழங்காமல் அரசியல் ரீதியாகவும் பல்வேறு வகையிலும் கடந்த காலங்களில் சனசவிய, மற்றும் சமுர்த்தி நிவாரணம் வழங்க்பட்டுள்ளன.

இதனை மறு சீரமைப்பு செய்து உண்மையாக கிடைக்க வேண்டிய ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தினதும் சனாதிபதியினதும் நோக்கமாகும். ஏழைத்தன்மையை தொடர்ந்து வைத்திருந்து அதின் மூலம் அரசியல் செய்ய நாம் விரும்பவில்லை.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தில் உள்வாங்கப்படாதவர்கள் அவர்களின் கோரிக்கைளை நிகழ்நிலையிலும் அல்லது பிரதேச செயலத்தில் அல்லது சனாதிபதி காரியத்திலும் சமர்ப்பிக்க முடியும். அதனை விடுத்து கூக்குரலிட்டு பயனில்லை. எவ்வளவு காலத்திற்கு எம்மால் கூக்குரலிட முடியும்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய காலத்திலும் சண்டையிட்டு கொள்கின்றனர் என்றார்.

# நாட்டில் சில...

மாத்தளையைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் பாசிக்குடா கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். பாதிக்கப்பட்ட நபர் ஒரு குழுவுடன் அப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தது மற்றும் பாதுகாப்பற்ற பகுதியில் குளித்தபோது நீரில் மூழ்கி மரணடைந்ததாக தெரியவருகிறது.

சிலாபம் தெதுரு ஓயாவில் ஒரு குழுவுடன் குளித்துக் கொண்டிருந்த நீர்கொழும்பைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். சம்பவம் இடம்பெற்று சில மணித்தியாலங்களின் பின்னர் உயிரிழந்தவரின் சடலம் பொலிஸாராலும் கடற்படையினராலும் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் கட்டுக்கரை குளத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 37 மற்றும் 55 வயதுடைய பரப்பக்கண்டல் பகுதியை சேர்ந்தவர் இருவர் காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# தட்டுப்பாடு...

மருந்துப் பொருட்களின் பெறுகை செயற்பாடுகளை செயல்திறன் மிக்கதாக முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், அதற்கமைய மருந்து பொருட்களின் தரம் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானம் செலுத்த தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

‘ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் மருத்துவத்துறை பற்றிய அவதானம் தற்காலத்தில் மேம்பட்டுக் காணப்படுவதாகவும் உலகளாவிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் இலங்கையின் வைத்தியத்துறைக்கான அர்பணிப்புக்களுக்கு பாராட்டு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் காணப்படும் மருத்துவத்துறை தொடர்பிலான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் அந்த தீர்வுகள் இலவச மருத்துவத்துறையின் எதிர்காலத்தில் எவவகையில் தாக்கம் செலுத்தும் என்பது பற்றியும் அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக முழு உலகத்தினதும் சுகாதாரச் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டதெனவும், கொவிட் தடுப்பூசிகளுக்காக இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 60 மில்லியன்களை செலுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

# தன்னினச் சேர்க்கையாளருக்கு...

அம்பாறை மாவட்டம் கல்முனையில் திங்கட்கிழமை (03) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்.

“சிறிய நாடான இலங்கையில் பல கலாச்சாரங்கள் உள்ளன. இங்கு இந்து பௌத்தம் இஸ்லாம் ஆகியவை சமயங்களாகும். இச்சமயங்கள் ஏற்றுக்கொள்ளாத தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கைகளை இலங்கை சட்டத்தில் தற்போது உட்புகுத்த அவசியமில்லை. இவ்வாறான விடயங்களை வெளிநாடுகளில் இயங்கும் சில தரப்பினர் இலங்கைக்குள் திணிக்கப்பார்க்கின்றனர். இந்த அரசாங்கமும் அந்த பணத்தில் ஆடிக்கொண்டு இருக்கின்றனர்.

இந்நடவடிக்கைகளை வெளிநாட்டினரின் திருப்திக்காக இலங்கைக்குள் திணிக்கப் பார்க்கின்றனர். இவ்வாறான விடயங்களை நாங்கள் எதிர்க்கின்றோம். மக்களுக்கு தேவையான விடயங்களை நாங்கள் செய்ய வேண்டும். மக்கள் இன்று பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு உணவின்றி எத்தனையோ பேர் தற்கொலை செய்துள்ளார்கள் என ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம்.

அவ்வாறான சூழ்நிலை இலங்கையில் உருவாகி வருகின்றது. அரசாங்கம் பைத்திகாரத்தனமாக வேலைகளில் ஈடுபடாமல் மக்கள் நலனில் ஈடுபடுமாறும் இவ்வாறான தன்னினச் சேர்க்கையாளர்களின் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபாடு காட்டுவதை வன்மையாக கண்டிக்கின்றோம் என்றார்.

சகோதர இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கு

# மாணவர்களை பழக்க வேண்டும்

## வலியுறுத்தினார் முப்தி யூசுப் ஹனிபா

■ நூருல் ஹுதா உமர்



இலங்கையின் மூத்த உலமாக்களில் ஒருவரான முப்தி யூசுப் ஹனிபா அக்கரைப்பற்று பெரிய பள்ளி வாயிலுக்கு வருகை தந்து பள்ளிவாயல் வளாகத்தினை சுற்றி பார்வையிட்டார்.

இதன்போது பள்ளிவாயிலின் சுற்றுச்சூழல் மிக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும், பள்ளிவாயிலில் இடம்பெறும் அண்மைக்கால நிகழ்வுகளை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் கேட்டறிந்தவர், அச்செயற்பாடுகளை பாராட்டிய வேளை பள்ளிவாசல் வளாகத்துடன் இளையவர்களின் தொடர்புகளை அதிகரிக்குமாறு கேட்டுக் கொண்டதுடன் அதற்காக பள்ளி வாயல் வளாகத்தில் விளையாடக் கூடிய விளையாட்டு ஒழுங்குகள் பற்றியும், இளையவர்களுக்கான பொழுதுபோக்கு சூழல் உருவாக்கப்படட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் கடந்த வருட சாதாரண தரத்தில் கணித, விஞ்ஞான பாடங்களில் பெற்ற பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாம் பாடத்தின் அடைவு மட்டம் மிகவும் வீழ்ச்சி அடைந்திருப்பதாக புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி கவலையை வெளியிட்டதுடன் எமது பிள்ளைகளின் இஸ்லாம் பாடத்தின் மீதான வீழ்ச்சி பெற்றோராகிய எம்மை முதியோர் இல்லம் வரை அழைத்துச் செல்லும் அபாயம் உள்ளதை மனதில் வைத்து உடனடியாக சாதாரண தர மாணவர்களுக்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்து இக்குறையை நிவர்த்தி செய்ய பள்ளிவாயில் நிர்வாகம் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அத்துடன் ஏனைய சமூகங்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவர்களாக எமது சக இனங்களோடு சகவாழ்வை பேணி நடக்க வேண்டிய வழிமுறைகள் பற்றி கருத்து வெளியிட்ட அவர், இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படும் போது மட்டும் தீர்வுகளை தேடிச் செல்கின்றவர்களாக நாம் இல்லாமல் எப்போதும் சக இனங்களின் சிவில் சமூக தலைவர்கள் மற்றும் மதப் பெரியார்கள் போன்றவர்களுடன் நல்லுறவை கட்டி எழுப்பி ஏனைய சமூகங்களுடன் கலந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டுமே தவிர கரைந்து போய் விடக்கூடாது என்பதையும் வலியுறுத்திப் பேசினார்.

## பாசையூரில் வெடிமருந்துகள் மீட்பு




யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் இருந்து வெடிமருந்துகள் திங்கட்கிழமை (03) மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ,யாழ்ப்பாண விசேட பொலிஸ் அதிரடி படையினரால் அவை மீட்கப்பட்டுள்ளன.

பொதி ஒன்றினுள் இருந்து 20 ஜெலட்டின் குச்சிகளே அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. ஜெலட்டின் குச்சிகளில் உள்ள வெடி மருந்துகளை பிரித்தெடுத்து , மீன்கள் பிடிப்பதற்கான டைனமேட் தயாரிக்க மீனவர்கள் பயன்டுத்துவதும் குறிப்பிடத்தக்கது.

## சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன சிவசேனையின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நிறைவு செய்து திரும்பும்போது தென்மராட்சி மறவன்புலவுவில் உள்ள சிவசேனையின் தலைவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) மாலை 3 மணியளவில் குறித்த சந்திப்பு நடைபெற்றது.

## வட்டவளையில் மண்சரிவு; வீட்டின் அறைக்குச் சேதம்



வட்டவளை பிரதேசத்தில் பெய்துக்கொண்டிருக்கும் அடைமழை காரணமாக, ரொசெல்ல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இதனால், அவ்வீட்டின் அறையொன்றும் அதிலிருந்த வீட்டு உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இந்த சம்பவம், திங்கட்கிழமை (03) காலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டாலும் வீட்டிலிருந்த எவரும் பாதிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் அறைக்கும் பொருட்களுக்கும் ஏற்பட்ட சேதம் தொடர்பில் இதுவரை மதிப்பிடவில்லை.

மலையகத்தில் கடுமையான மழை பெய்து வருவதால், பிரதான வீதியோரங்களில் மண்மேடுகள் சரிந்து விழுகின்றன. ஆகையால், அவதானத்துடன் பயணிக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மக்களிடமும் வாகன சாரதிகளிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நுவரெலியாவில் பல இடங்களில் மண்சரிவு

■ செ.திவாகரன், டி.சந்ரு. கௌசல்யா

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையையடுத்து பலஇடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் நானுஓயா கிளாரண்டன் பகுதியில் திங்கட்கிழமை (03) காலை ஏற்பட்ட மண்சரிவினால் இவ்வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டு ஒருவழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தொடர் மழை காரணமாக நுவரெலியா தலவாக்கலை பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு, மண்திட்டுக்கள் சரிந்து வீழ்ந்துள்ளதுடன் கற்பாறைகள் புரண்டுவிழும் அபாயமும் காணப்படுவதனால் இவ்வீதியில் பயணிப்பவர்கள் அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்படுள்ளது.

தொடர் சீரற்ற வானிலை காரணமாக கடும் பனிமூட்டமாக காணப்படுவதனால் பிரதான வீதிகளை பயன்படுத்துபவர்கள் மிக அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## இளைஞர்கள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு


இருசக்கர வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மீது காட்டுப்பகுதியில் மறைந்திருந்த நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் நடத்திய சம்பவம் திருகோணமலை குச்சவெளி பகுதியில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜெயநகர் பகுதியை சேர்ந்த 17 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்களே குறித்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகம் நடாத்திய நபர் தொடர்பான தகவல்கள் எதுவும் இன்னும் கிடைக்கப்பெறவில்லை.

குச்சவெளி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு, சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.





## இன்று தீர்த்தோற்சவம்

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழாவின் தீர்த்தோற்சவம் இன்று (4) செவ்வாய்க்கிழமை மாணிக்கக் கங்கையில் நடைபெறவுள்ளது.

ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஆடி வேல்விழா கடந்த 15 தினங்களாக லட்சக்கணக்கான பக்தர்கள் சகிதம் சிறப்பாக நடைபெற்றது.

கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிசான் குணசேகர தலைமையில் பெரஹரா சிறப்பாக நடைபெற்றது.


அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜூலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.

வி.ரி.சகாதேவராஜா










## தேர்த் திருவிழா

நுவரெலியா– பதுளை வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமதுர கணபதி ஆலய வருடாந்த தேர்த் திருவிழா, ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கோ. சிவபெருமாள் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

ஆ.ரமேஸ







## பதவியேற்பு நிகழ்வு

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 45 ஆவது தலைவராக. மருத்துவர் ச.செளந்தரராஜன் பதவி ஏற்கும் நிகழ்வு டைக் வீதியில் உள்ள றோட்டரி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவர் என். வர்ணகுலேந்திரன் கலந்து கொண்டார்.

ஹஸ்பர்






# குரலற்றவர்களின் குரல்களை நசுக்கும் கைங்கரியத்தை கைவிடவும்

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விவாதம் பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், மனிதர்களின் சுகாதாரத்துக்கு நேரடியாக தாக்கத்தைச் செலுத்தி தீங்கிழைக்கக்கூடிய மதுபானம் மற்றும் புகைப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. அதனைப்பற்றி சாதாரண மக்கள் சந்தோஷமடைந்தனரே தவிர கவலைகொள்ளவில்லை.

குடியரசின் உள்நாட்டுப் படுகடன் நிலைபெறு தன்மையை உறுதிசெய்வதற்கும் இலங்கை மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் பயனளிக்கும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை முன்னிலைப்படுத்திய பொருளாதார மீட்சிக்கான விரைவான மாற்றத்தை உறுதி செய்வதற்கும் உள்நாட்டுப் படுகடனை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து அங்கிகாரங்களையும் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சருக்குப் பெற்றுக்கொடுப்பதற்கும் இந்தப் பிரேரணையூடாக தீர்மானிக்கப்பட்டது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், “ தங்களுடைய அரசியல் பயணத்துக்கு பெரும்வாரியாக பணத்தை அள்ளி இறைக்கும் பெரும்முதலைகளின் கழுத்தை நெரிக்காமல், குரலற்றவர்களின் குரல்வலையை நசுக்கும் வகையிலேயே இப்பிரேரணை அமைந்திருந்தது” என தெளிவுபடுத்தினார்.

குறிப்பாக, ஊழியர் சேமலாப நிதியில் கையை வைத்து, சாதாரண தொழிலாளர்களை பள்ளத்தில் இழுத்து வீழ்த்தும் பிரேரணையாகுமென, எதிரணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். அக்குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்த ஆளும் தரப்பினர், பொருளாதார மீட்சிக்கானது என வியாக்கியானம் செய்தனர்.

இதற்கிடையே அன்றாடம் வரி அறவீட்டின் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்கான விசேட நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் உள்ளிட்ட பரிந்துரைகளை கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்லாபிட்டிய தெரிவித்தார்.

வரி ஏய்ப்போருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நீதிச் செயற்பாடுகளை அவதானிக்கும் போது, மிகமிக மந்தமாகவே நகர்த்தப்படுகின்றது. அமைச்சர்கள் பலர், தங்களுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கான தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை முறையாக செலுத்தவில்லை, பல இலட்சக்கணக்கான ரூபாய், நிலுவையில் உள்ளதென்பது வெளிப்படையாகும்.

விசேட நீதிமன்றம் அவசியமானது. எனினும், கண்ணாடிப் பெட்டிக்குள் இருந்து கொண்டு கல்லெறியாமல், கறை படிந்திருக்கும் மக்கள் பிரதிநிதிகள் சிலரின் கைகளை சுத்தப்படுத்திக்கொண்டு, அதிரடியான செயற்பாடுகளில் களமிறங்குவதே காலத்தின் தேவைப்பாடாக அமைகின்றது.

அமைச்சர்களில் பலர், பொதுமக்களின் நிதியை சூறையாடிவிட்டனர் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போதெல்லாம், யார் சாட்சி என மட்டுமே கேட்பார்கள், எனினும், வருவாயை மிஞ்சிய சொத்து சேர்ப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எவ்விதமான பொறிமுறையும் இல்லை.

எந்தச் சட்டம் அமல்படுத்தப்பட்டாலும், நேரடியாகவும் உடனடியாகவும் பாதிக்கப்படுவது சாதாரண பொதுமக்களே, ஆகையால், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு பிரேரணையின் ஊடாக, குரலற்றவர்களின் குரலை நசுக்கிவிடவேண்டாம் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஆடம்பரமாக வாழ்ந்தால்த்தான் தங்களுக்குக் கௌரவம் கிடைக்கும் என நம்புகின்றார்கள். ஒருவரின் பெறுமதியை வெளப்பார்வையில் கண்டு மதிப்பிடுவது பெரும்பாலும் தவறாகவே அமைந்துவிடுகின்றது.

ஆடம்பரமாகத் தோற்றம் காட்டுபவர்கள் யாவரும் கல்வியறி, பணபலம் கொண்டவர்கள் என்றே பலரும் கருதுகின்றார்கள். பார்வையால் எவரையும் ‘இப்படிப்பட்டவர்தான்’ எனக் கண்டுபிடிக்க முடியாது.

முகநூலில் நண்பர்களாகி, அவர்களையே நம்புபவர்கள், எப்படி நேரில் பார்ப்பவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்?

இந்த உலகம் பொய்மையில் அழகைக் காண்கின்றது. ஒழுக்கம் என்றால் என்ன எனத் தேடுவதும் கிடையாது. எவரையும் உடன் சந்தேகப்படவும் கூடாது. அதேவேளை, எவரையும் உடன் நம்புவதும் சரியானதில்லை.

இன்றைய உலகில் கற்றவர்கள், செல்வந்தர்கள் கூட, பண்பு தெரியாமல் வாழ்ந்து வருகின்றார்கள். எளிய நிலையில் தோற்றம் காட்டுபவர்களை மட்டுமல்ல, யாவரையும் கௌரவப்படுத்த வேண்டும்.

எவர் எப்படித் தோன்றினாலும், பண்பான மனிதர்களாக இருந்தால், அவர்களுடன் பேசும்போதும் பழகும்போதும் உண்மைநிலை புரியும். எவரையும் மதித்து நடப்பவரே ஒழுக்கமான மனிதர்.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

# திரை நேரத்தின் தாக்கம்




திருமதி மாதங்கி சுதர்சன்
தாதிய உத்தியோகத்தர்
உளவியல் துறை
மருத்துவ பீடம்
யாழ் பல்கலைக்கழகம்




திரை நேரம் (Screen Time ) என்பது தொலைக்காட்சி பார்ப்பது, வீடியோ கேம் விளையாடுவது அல்லது திரையுடன் கூடிய மின்னணு சாதனத்தைப் பயன்படுத்துவது (ஸ்மார்ட்ஃபோன்,டேப்லெட் போன்றவை) ஆகியவற்றில் செலவழிக்கும் நேரத்தினை குறிக்கும். குறிப்பாக இன்றைய டிஜிட்டல் உலகில் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே பலதரப்பட்ட மின்னியல் தொழில்நுட்ப சாதனங்களான ஸ்மார்ட் போன், டேப்லெட் போன்றவற்றை மிக எளிதாக அணுகுவதற்கான வாய்ப்புக்களை அதிகம் பெறுகின்றனர்.

மேலும் இன்று பல வீடுகளில் குழந்தைகள் அடம்பிடிக்கும் போதும், அவர்களுடைய அழுகையை நிறுத்துவதற்கும், உணவு ஊட்டும்போதும் பெற்றோர்கள் ஸ்மார்ட் போன்களில் கார்ட்டூன் வீடியோக்களை குழந்தைகளுக்கு பார்ப்பதற்கு அனுமதிப்பதையும் நாம் காண்கிறோம். ஒரு சிலர் தமது குழந்தை சிறுவயதிலிருந்தே மின்னணு சாதனங்களை இயக்குவதை பெருமையாக கூறுவதனையும் நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.எனவே இந்த கட்டுரையில் உளவியல் சமூக வளர்ச்சியில் திரை நேரத்தின் எதிர்மறையான விளைவுகள் பற்றி ஆராய்வதன் மூலம் பெற்றோர் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியுமென நினைக்கிறேன்.

### கவனத்தை ஈர்க்கும் திறன் (Attention span)

குழைந்தை பருவத்தில் இருந்து வளர்ச்சியடைய வேண்டிய மிக முக்கிய திறனாகும். இது குழந்தைகள் தமது கருமங்களில் உன்னிப்பாக கவனம் செலுத்தவும், அந்த கருமம் தொடர்பான வழிமுறைகளை பின்பற்றவும் உதவுகின்றது. எனினும் அதிகளவு திரை நேரம் குழந்தைகளின் கவனத்தை சிதறடித்து பிற்காலத்தில் கவனக்குறைவு பிரச்சனைகளுக்கு ஆளாக்கின்றது

மேலும் ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் இலத்திரனியல் சாதனங்களில் நேரத்தை செலவிடும் பிள்ளைகளுக்கு மனச்சோர்வு, பதட்டம் போன்ற உணர்ச்சி மற்றும் நடத்தைகள் சார்ந்த பிரச்சனைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என இலங்கை தேசிய மனநல நிலையம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

### சமூக திறன்கள் (Social skills)

சமூக திறன்கள் உளவியல் சமூக வளர்ச்சியில் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். குழந்தைகள் நேருக்கு நேர் தொடர்பு கொள்வதன் மூலம் மற்றவர்களுடன் எவ்வாறு தொடர்புகொள்வது என்பதனை கற்றுக்கொள்கிறார்கள் ஆனால் இச் சாதனங்களின் அதிகரித்த பயன்பாட்டினால் குழந்தைகள் மற்றவர்களுடன் செலவழிக்கும் நேரம் குறைவடைகின்றது. இது சமூக தனிமைக்கு இட்டுச்செல்வதுடன் குழந்தைகள் நண்பர்களை தேடிக்கொள்வதிலும் மிக சவாலினை எதிர்கொள்வதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

### உணர்ச்சி கட்டுப்பாடு (Emotional regulation )

உணர்ச்சி கட்டுப்பாடு என்பது உளவியல் சமூக வளர்ச்சியின் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். குழந்தைகள் தங்கள் பராமரிப்பாளர்கள் மற்றும் சகாக்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் தங்கள் உணர்ச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள். இருப்பினும், அதிகப்படியான திரை நேரம் இந்த செயல்முறையை சீர்குலைக்கும். குழந்தை வளர்ச்சி தொடர்பாக வெளியிடப்பட்ட ஒரு ஆய்வில், திரைகளில் அதிக நேரம் செலவிடும் குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள் மற்றும் அதிக எதிர்மறையான நடத்தைகளைக் காட்டுகிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது குழந்தைகளின் உளவியல் சமூக வளர்ச்சிக்கு பல நன்மைகளை ஏற்படுத்தும். திரை நேரத்தைக் குறைப்பதன் மூலம், குழந்தைகளுக்கு நேருக்கு நேரான சமூக தொடர்பு, உடல் செயற்பாடு மற்றும் கற்பனை விளையாட்டுக்கான வாய்ப்புகள் அதிகம் ஏற்படும். இது கவனத்தை மேம்படுத்தவும், உணர்ச்சி கட்டுப்பாடுகளை மேம்படுத்தவும், ஒட்டுமொத்த மன ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவும்.

மேலும் திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவது உடல் ஆரோக்கியத்திலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். திரையில் அதிக நேரம் செலவழிக்கும் குழந்தைகளுக்கு உடல் பருமன், தூக்கக் கோளாறுகள் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் அதிகம். உடல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதன் மூலமும், திரை நேரத்தைக் குறைப்பதன் மூலமும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் வாழ்நாள் முழுவதும் பயனளிக்கும் ஆரோக்கியமான பழக்கங்களை வளர்த்துக் கொள்ள முடியும்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் ஆய்வின்படி, இலங்கையில் குழந்தைகள் ஒரு நாளைக்கு சராசரியாக 3-4 மணிநேரம் மின்னணு சாதனங்களில் செலவிடுகின்றனர் என்றும் மேலும் 70% க்கும் அதிகமான குழந்தைகள் படுக்கைக்குச் செல்வதற்கு முன் மின்னணு சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இது அவர்களின் தூக்க முறைகள் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தில் தீங்கு விளைவிக்கும். மேலும், மின்னணு சாதனங்களின் அதிகப்படியான பயன்பாடு உடல் பருமன், பார்வை பிரச்சினைகள் மற்றும் தசைக்கூட்டு கோளாறுகள் ஆகிவயற்றை தோற்றுவிக்கின்றது.

### திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான உதவிக்குறிப்புகள்:Set Limits (வரம்புகளை அமைத்தல்):

திரை நேரத்தைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உங்கள் பிள்ளைக்கு விளக்கவும் மற்றும் ஒவ்வொரு நாளும் திரையில் எவ்வளவு நேரம் செலவிடலாம் என்பதற்கு குறிப்பிட்ட வரையறைகளை அமைக்கவும். American Academy of Pediatrics இல் , ஒரு நாளைக்கு 2-5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஒரு மணிநேரத்திற்கு மேல் திரை நேரம் இருக்கக்கூடாது என்று பரிந்துரைக்கிறது.

### Monitor Content (உள்ளடக்கத்தைக் கண்காணிக்கவும்):

உங்கள் குழந்தை பார்க்கும் அல்லது விளையாடும் உள்ளடக்கம் வயதுக்கு ஏற்றதா மற்றும் கல்வி சார்ந்ததா என்பதை உறுதிப்படுத்தவும். கற்றல் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் செயல்களில் ஈடுபட உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும்.

### Encourage Physical Activity (உடல் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும்):

ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்க உடல் செயற்பாடு மற்றும் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபட உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும். நடைபயிற்சி, பைக்கிங், நீச்சல் போன்ற குடும்ப நடவடிக்கைகளில் அவர்களுடன் பங்கேற்கவும்.

### Create Tech–Free Zones (தொழில்நுட்பம் இல்லாத வலயங்களை உருவாக்குங்கள்) :

நேருக்கு நேர் தகவல்தொடர்பு மற்றும் திரை நேரத்தைக் குறைக்க உங்கள் வீட்டில் சாப்பாட்டு மேசை அல்லது படுக்கையறை போன்ற தொழில்நுட்பம் இல்லாத வலயங்களை உருவாக்குங்கள்.

### Be a Good Role Model (ஒரு நல்ல முன்மாதிரியாக இருங்கள்):

பெற்றோர்கள் தமது சொந்த திரை நேரத்தை முடிந்தளவு குறைத்துக்கொள்வதனூடாக உங்கள் குழந்தைக்கு ஆரோக்கியமான தொழில்நுட்ப பழக்கங்களை கற்பிப்பதில் முன் மாதிரியாக இருங்கள்.

உங்கள் குழந்தை ஏற்கனவே அதிகப்படியான திரை நேரத்தை வெளிப்படுத்தியிருந்தால், அவர்களை அதிலிருந்து மீட்கவும், ஆரோக்கியமான உளவியல் வளர்ச்சியை மேம்படுத்தவும் வழிகள் உள்ளன. திரைகளை உள்ளடக்காத பொழுதுபோக்குகள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபட அவர்களை ஊக்குவிப்பதாகும். ஒரு இசைக்கருவியை வாசிப்பது, விளையாட்டுப் பயிற்சி செய்வது, வாசிப்பது அல்லது எழுதுவது ஆகியவை இதில் அடங்கும். மனதைத் தூண்டும் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் செயல்களை ஊக்குவிப்பதன் மூலம், குழந்தைகள் தங்கள் வாழ்க்கையின் அனைத்து காலகட்டங்களிலும் உதவக்கூடிய பல்வேறு திறன்களையும் ஆர்வங்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

திரையின் நேரத்தைக் கட்டுப்படுத்துவது, அதை முற்றிலுமாக நீக்குவதைக் குறிக்காது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். திரைகள் கற்றல் மற்றும் பொழுதுபோக்கிற்கான ஒரு மதிப்புமிக்க கருவியாக இருக்கலாம், மேலும் மிதமான பயன்பாடாக இருந்தால், அவை குழந்தையின் வாழ்க்கையின் ஆரோக்கியமான பகுதியாக இருக்கும்.

## கடிதங்கள்

### கண்டுகொள்ளாத அதிகாரிகள்



திருகோணமலை மாவட்டத்தில் தம்பலகாமம் நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிப்பொத்தானை கண்டி பிரதான வீதியில் மூன்று வருடங்களுக்கு மேலாக குடிநீர் குழாய் வெடித்து நீர் வீண் விரயமாகுவதாக மக்கள் குற்றச்சாட்டுகின்றனர்.

தொண்ணூற்று ஆறாம் கட்டைக்கும் தொண்ணூற்று ஐந்தாம் கட்டைக்கும் இடையில் மூன்று வருடங்களுக்கு மேலாக கண்டி பிரதான வீதியில் உள்ள குடிநீர் குழாய் வெடித்து நீர் வீண் விரயமாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில், தம்பலகாமம் நீர்ப்பாசன திணைக்களத்துக்கு பல முறை அறிவித்த பின் அதிகாரிகள் வந்து பார்வையிடுகின்றனர். இதுதொடர்பில் மேலிடத்துக்கு அறிவிப்பதாக தெரிவித்துவிட்டு செல்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குடிநீர் விரையமாவதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் கவனம் செலுத்துமாறு மக்கள் கோரிக்கை தெரிவிக்கின்றனர்.

- எப்.முபாரக்



# யார் கண்டுகொள்வார்



சண்முகம் தவசீலன்

இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய் என்று இயற்கை உரக்கப் போதித்தாலும் நாங்கள் செவிமெடுப்பதாக இல்லை. நாங்களே இயற்கையை ஆளப்பிறந்தவர்கள் என்ற மமதையில் இயற்கையைத் தொடர்ந்தும் அடிமைப்படுத்துகிறோம். நிலத்திற்கு நீரைப்பருக்கும் வாய்களான குளங்களை இறுக்கி மூடியும், வெள்ள வாய்க்கால்களைக்கூட விட்டு வைக்காமல் கம்பள வீதிகளாக்கியும், சதுப்பு நிலங்களைக் குடியிருப்புகளாக்கியும் இயற்கையை எமக்கு ஏற்றவகையில் கட்டமைத்து வருகிறோம்.

தற்போதைய மனிதனை விடப் புத்திக்கூர்மையுள்ள மனிதன் பரிணாம வளர்ச்சியின் போது எதிர்காலத்தில் தோன்றினாலும் அவனாலுங்கூட இயற்கையை ஒருபோதும் வெல்ல முடியாது. இயற்கையோடு இணைந்து இசைவுற வாழ்தலே இயற்கைப் பேரழிவுகளிலிருந்து நாங்கள் தப்புவதற்கான ஒரே வழிமுறையாகும். இதனை நன்கறிந்த வர்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் காலப்பகுதியில் இயற்கையை பாதுகாப்பதற்கான பல்வேறு வழிவகைகளை கையாண்டனர் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமன்றி அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த இடங்களெங்கும் குறிப்பாக காடுகளை அழிப்பதை விடுத்து காடுகளை வளர்த்து வந்தனர் அதுமாத்திரமின்றி இயற்கைக்கு பாதகமான பல்வேறு விடயங்களுக்கான மாற்று வழிமுறைகளை கையாண்டனர்.

2009 ஆண்டு யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகளைத் கடந்துவிட்ட இன்றைய காலத்தில் இயற்கை வளங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரியளவில் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை யாரும் கண்டுகொள்ளாமல் இருப்பது வேதனையான ஒரு விடயம். இன்றைய சூழலில் இயற்கையை அழிப்பதற்கு பலர் முண்டியடிக்கின்றனர் அனால் மாறாக இயக்கையை பாதுகாப்பதற்காக சட்டம் சந்தவர்களோ மக்களோ முன்வரவில்லை என்பதே இயற்கையை நேசிக்கின்ற பலரின் குற்றச்சாட்டாக காணப்படுகிறது முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த வரை கருங்கல் அகழ்வு, கிரவல் அகழ்வு,மணல்அகழ்வு, காடழிப்பு, என பல்வேறு வழிகளில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. அபிவிருத்தி என்பது மனித வாழ்வுக்கு இன்றியமையாததாக இருப்பினும் இந்த அபிவிருத்தி பணிகளுக்காக முறைகேடாக இடம்பெறும் இயற்கை வள சுரண்டல்கள் மக்களை பாரிய இயற்கை அனர்த்தங்களுக்குள் கொண்டு செல்லும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இவ்வாறாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த பல ஆண்டுகளாக வகைதொகையின்றி இடம்பெறும் கருங்கல் அகழ்வு நடவடிக்கை காரணமாக பாரிய சூழல் பிரச்சினைக்கு குறித்த பகுதி மக்கள் முகம்கொடுத்துள்ளனர்.

குறித்த பகுதியில் இடம்பெறுகின்ற இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கையின் காணமாக பாரியளவில் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்த கருங்கல் அகழ்வு பணிகள் இடம் பெறுவதனால் பாரிய காடழிப்பு நடவடிக்கை இடம் பெறுகின்ற அதே வேளையிலே குறிப்பிட்ட இடத்திலே உரிய நிபந்தனைகளை மீறப்பட்டு வெடி மருந்துகள் பாவிக்கப்படுகின்ற கார ணங்களால் அருகில் உள்ள வீடுகளில் வெடிப்பு சம்பவங்கள் மற்றும் அருகில் உள்ள வீடுகளில் உள்ள கற்பவதிகள் சிறுவர்கள் வயோதிபர்கள் பாதிக்கப்படு கின்றமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இதனை விடவும் குறிப்பாக கருங்கல் அகழ்வு நடைபெறும் இடத்தினை அண்டிய பகுதிகள் விவசாய கிராமங்களாக இருக்கின்ற நிலையில் அதிகளவான ஆழத்தில் கிடங்குகள் தோண்டப்படுவதன் விளைவாக குறித்த பகுதிகளில் உள்ள கிணறுகளில் நீர் வற்றி போகின்ற நிலைமை காணப்படுகிறது இதனால் மக்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகளோடு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம்,வளவள பாதுகாப்பு திணைக்களம்,மத்திய சுற்றாடல்அதிகார சபை,பிரதேச செயலகம்,பொலிசார் உள்ளிட்ட பல்வேறு திணைக்க ளங்கள் தொடர்பு பட்டிருந்தாலும் ஒருவரை ஒருவர் சாட்டிக் கொண்டு இந்த கருங்கல்அகழ்வு நடவடிக்கைகளால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் சூழல் சுற்றுச் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகள் தொடர்பில் அக்கறை செலுத்தவில்லை என்றே குற்றம்சாட்டப்படுகிறது குறிப்பாக இந்த பகுதியில் தொடர்ச்சியாக கருங்கல் அகழ்வு நடவடிக்கையை மேற்கொள்ளும் இரண்டு கொம்பனிகள் அவர்களுடைய அனுமதி பத்திர விதிமுறைகளை மீறி பாரிய அளவில் குழிக்கள் தோண்டப்பட்டு இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தாலும் இன்று வரை இதற்கான உறுதியான எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை இவற்றையும் கடந்து ஈழத் தமிழர் வரலாற்றுடன் தொடர்பு டையதும், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துடன் தொடர்புடையதுமான வாவெட்டி மலை இதனால் ஆபத்தை எதிர்கொண்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர் . தொல்பொருள் வலயமாக காணப்படும் இந்த மலையில் பாரிய அளவில் கருங்கல் அகழ்வு இடம்பெற்றுச் செல்கின்ற போதும் தொல்பொருள் திணைக்களம் கூட இங்கே இருக்கின்ற தமிழர்களின் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட குறித்த பிரதேசத்தை அண்மித்த பகுதியில் இடம்பெறுகின்ற கருங்கல் அகழ்வு நடவடிக்கைகள் தொல்பொருள் சான்றுகளுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிலைமை இருந்தும் அவர்கள் கூட இந்த விடயத்தில் கண்டும் காணாமல் இருக்கின்றார்கள்.

குறிப்பாக இந்த விடயம் தொடர்பிலே தொடர்ச்சியாக அபிவிருத்தி குழு கூட்டங்களிலே பேசப்பட்டு வந்தாலும் இதற்கு இன்று வரை தீர்வுகள் எட்டப்பப டவில்லை தொடர்ச்சியாக இங்கு இடம் பெறுகின்ற இந்த கருங்கல் அகழ்வு நடவடிக்கையானது எதிர்காலத்தில் குறித்த கருங்கல் அகழ்வு இடம்பெறுகின்ற இந்த இடத்தை அண்டிய மக்களுக்கு பாரிய ஒரு பிரச்சினையாக மாறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனவே இந்த விடயங்களை உரியவர்கள் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது அந்த மக்களினுடைய கோரிக்கையாக இருக்கின்றது



# நன்மதிப்பை பெற வேண்டும்



தனம் சந்ரு



ஒரு தனி மனிதன் அல்லது ஒரு சமூகம் வாக்குரிமை பெற்று இருக்கும் பட்சத்தில் தமக்கான வாக்கினை தமக்கு சேவையாற்ற கூடியவர்களை தேர்ந்தெடுப்பதற்கும்,ஜனநாயக உரிமையை பாதுகாத்து அதனூடாக பிரதேச அபிவிருத்தி உள்ளிட்ட பொது பயன்பாடு அபிவிருத்தியினை பெற்றுக்கொள்ளவும் என எதிர்பார்ப்புக்கு மத்தியில் வழங்குகின்றனர்.

நுவரெலியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நானு ஓயா டெஸ்போட் மற்றும் கிரிமிட்டிய பகுதி தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் வாக்களிக்க தகுதி பெற்றவர்கள் தமது பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தி குறைப்பாடுகளுக்கு தீர்வு காணுவதற்காக கடந்த காலங்களில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து உள்ளூராட்சி சபைகள்,பாராளுமன்றம் என தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வாக்களித்துள்ளனர்.

அந்தவகையில் நானுஓயா டெஸ்போட் மற்றும் கிரிமிட்டிய கிராம சேவகர் பகுதியில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் தமக்கு சுத்தமான குடிநீரை பெற்றுத்தரும் முக்கியமான கோரிக்கையை அரசியல் வாதிகளிடம் முன்வைத்து தமது வாக்குகளை கடந்த காலங்களில் வழங்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க அந்த பிரதேச தோட்டத்தொழிலாளர்கள் மிக நீண்ட காலமாக சுத்தமான குடிநீர் கிடைக்காமல் பல்வேறு பிரச்சினைகளுக்கும், அசௌகரிங்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

அதேநேரத்தில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் சுத்தமான குடிநீரை பருகி வந்த டெஸ்போட், கிரிமிட்டிய தோட்ட மக்கள் தற்போது கழிவு நீர் கலந்த குடிநீரை பருக வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

புதிதாக நிர்மானிக்கப்பட்டுள்ள புதிய வீடமைப்பின் பகுதியிலிருந்து வெளியாகும் பல்வேறு கழிவுகளும், கழிவு நீரும் மக்கள் பயன்படுத்தி வந்த சுத்தமான குடிநீரில் கலக்கப்பட்டு தற்போது அந்த மக்கள் கழிவு நீரை பருக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுகாதார பிரச்சினைகளுக்கும்,சுத்தமாக பருக குடிநீர் இன்றியும் பல அசௌகரீகங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. இந் நிலையில் இந்த விடயம் தோட்ட நிர்வாகம்,தோட்ட சகாதார உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட சுகாதார அதிகாரிகள் என சம்பந்தப்பட்ட பல தரப்புகளின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

இதனை தொடர்ந்து குறித்த தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க தீர்மானங்கள் தோட்ட நிர்வாகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு இப்பகுதியில் குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் தோட்டங்கள் இனங்காணப்பட்டு குடிநீர் வழங்க திட்டம் உருவாக்கப்பட்பது.

இதற்கமைமை இனங்காணப்பட்ட நானு ஓயா கெல்சி , மாகாஎலிய , டெஸ்போட் , டெஸ்போட் கீழ் பிரிவு , டெஸ்போட் மேல் பிரிவு , கிரிமிட்டி , அவோக்கா , வழமலை , கர்லபேக் , தம்பகஷ்த்தலாவ போன்ற பத்து தோட்டங்களுக்கு குடிநீர் வழங்க நீர் வளங்கள் அதிகார சபை ஊடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் இதற்காக நிதியை உலக வங்கி ஊடாக பெற்றுக்கொள்ளவும் திட்டமிடப்பட்டு அதற்காக பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டதுடன் சமார் எட்டு மில்லியன் நிதியும் உலக வங்கி வழங்கி ஒதுக்கியிறுந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் நானுஓயா பிரதேசத்தில் 476A கிரிமெட்டிய கிராம அலுவலர் பிரிவிட்குட்பட்ட நானுஓயா கெல்சி தோட்டத்தை மையமாக கொண்டு குடிநீர் திட்டத்திற்கான ஆரம்ப வேலைகள் செயல்படுத்தப்பட்டது.

இதற்காக கெல்சி ஆற்றிலிருந்து குழாய்கள் பதித்து குடிநீர் பம்பிங் செய்து, தெரிவு செய்யப்பட்ட பிரதேச தோட்ட மக்களுக்கு குடிநீரை வினியோகிக்கும் வகையில் திட்டமிட்டு அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டது.





அதேநேரத்தில் இக்குடிநீர் பயனாளிகளை சென்றடைய இப் பணியின் ஆரம்பக்கட்ட பணிகளுக்கு நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு ஆரம்ப பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேநேரத்தில் பாரிய குடிநீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வரும் டெஸ்போட், மற்றும் கிரிமிட்டிய தோட்ட மக்களின் வேண்டுகோளாக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தில் இத் தோட்ட மக்களுக்கு குடி நீர் வழங்காது குடி நீர் பற்றாக்குறை என்றால் என்ன என்று தெரியாது நிரந்தரமாக சுத்தமான குடிநீரை இன்றும் தாராளமாக பருகி வரும் கெல்ஸி மற்றும் மஹா எளிய தோட்ட மக்களுக்கு ஆரம்பக்கட்ட குடி நீர் வழங்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக மாத்திரம் நான்கு மில்லியன் ரூபாய் செலவு செய்யப்படுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன் பல்வேறு கருத்து முறன்பாடுக ளையும்,அரசியல்வாதிகள்,அ ரசாங்க அதிகாரிகள்,தோட்ட அதிகாரிகள்,திட்ட பணிப்பாளர்கள் ஆகியோர் மீது கடும் கோபத்துடன் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக நீர் வளங்கள் அதிகார சபை மற்றும் அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு குடி நீர் பயன்பாடு அவசரமாக தேவைப்படும் டெஸ்போட் மற்றும் கிரிமெட்டிய மக்களுக்கு நீர் வழங்க தீர்வை பெற்று தரவேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் தனி நபர்கள் பலர் தமது கருத்துக்களையம் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் டெஸ்போட் தோட்டத்தை சேர்ந்த இவர் கருத்து தெரிவிக்கையில்.கெல்ஸி மஹா எளியாவுக்கு குடி நீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

ஆனால் குடி நீருக்காக மிகவும் கட்டப்படும் தோட்ட மக்கள் டெஸ்போட்,கிரிமிட்டிய பகுதியில் தான் அதிகமாக இருக்கின்றனர் ஆனால் முதலில் குடிநீர் தட்டுப்பாடு காணப்படும் மக்களின் தாகத்தை தீர்க்காது தினமும் சுத்தமான குடி நீரை தட்டுப்பாடு இன்றி குடித்து வரும் கெல்ஸி மஹா எளிய மக்களுக்கு வழங்குவதை போன்று எங்களுக்கும் காலம் தாழ்த்தாது குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அசுத்தம் கலந்த நீரை குடிநீராக அருவருப்புடன் பருகி நோய் தாக்கும் என்ற அச்சத்துடன் வாழும் எங்களது பிள்ளைகளின் சுகாதாரம் மற்றும் நாய்தான் சீக்கிரமாக முகம் கொடுக்க நேரிடும் என்பதால் பிரதேச அரசியல்வாதிகள்,அதிகாரிகள் நன்கு அவதானித்து சுத்தமான குடிநீரை டெஸ்போட் மக்களுக்கும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

நாங்கள் புதிதாக நிர்மானிக்கப்பட்ட வீடமைப்பில் வசிக்கிறோம். எமக்கும் பாரிய குடிநீர் பிரச்சினை உள்ளது.நாங்களும் மிக நீண்ட நாட்களாக சேரு கலந்த தண்ணீர்தான் பருகி வருகிறோம்.

எங்களது பிள்ளைகள் தினமும் பாடசாலைக்கு செல்கின்றனர். அவர்களின் சீருடைகள் இந்த சேரு கலந்த தண்ணீரில் தான் கழுவப்படுகிறது. இந்த நிலையில் சுத்தமான நீர் இல்லாததால் அவைகளும் மஞ்சல் நிரமாக காட்சியளிப்பது எங்கள் மனதுக்கு பாரிய கவலையை தருகிறது.

எமது பிள்ளைகளும் எம்மிடம் நாம் எப்போதும் சுத்தமான தண்ணீரை குடிக்க போகிறோம். அழகிய வெண்ணிற ஆடையை உடுத்தி பாடசாலைக்கு செல்லப் போகிறோம் என கேள்வி எழுப்பியவாறு இருக்கின்றனர்.

எபோஸ்போட் தோட்டமக்கள் தற்போது சொல்லன்னா துயரத்துடன் சேரு கலந்த தண்ணீரை சூடாக்கி பருகுவதுடன், அதே சேரு கலந்த தண்ணீரில்தான் சோறும் சமைத்து சாப்பிடுகின்றோம்.

சுத்தமான குடிநீர் கிடைக்காமல் காலத்திற்கும் நாங்கள் எதிர் நோக்கி வருகின்ற தண்ணீர் பிரச்சினையால் சிறுநீர் கோளாறு உள்ளிட்ட பல்வேறு சகாதாரப்பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றோம்.

எங்களுக்கு சுத்தமான குடி நீரை வழங்குங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தெ கடந்த காலங்களில் எமது வாக்குகளை அரசியல்வாதிகளுக்கு வழங்கி நாள்தோறும் தொழிற்சங்கங்கள்,அரசியல் வாதிகள் என பலரிடமும் சென்று முறையிட்டு வருகிறோம். ஆனால் எங்கள் கோரிக்கை செவிமடுக்கவில்லை பிரச்சினைதான் தீராமல் இருக்கிறது.

வாக்களித்துவிட்டு எமது தண்ணீர் பிரச்சினையை தீர்க்க ஒவ்வரிடமும் பிச்சையெடுப்பது போல கெஞ்சி வருகின்றோம். ஆகையால் இந்த விடயத்தில் மலையக அமைச்சர்கள்,பிரதேச அரசியல்வாதிகள் உடனடியாக தலையிட்டு உரிய தீர்வை பெற்று கெல்ஸி மஹா எளிய பகுதியில் ஆரம்பித்துள்ள தண்ணீர் திட்டம் ஊடாக எமக்கு தண்ணீரை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குடிநீர் பஞ்சம் என்னவென்று தெரியாத குறுகிய ஜன தொகையை கொண்ட கெல்ஸி மஹா எளிய தோட்ட மக்களை மாத்திரம் இலக்கு வைத்து திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட முழு நிதியில் அரைவாசியை செலவு செய்து குடிநீர் வழங்குவது அநீதியாகும் என சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர் ஒருவர் இத்திட்டம் எந்த மக்களின் குடிநீர் பிரச்சினையை தீர்க்க முதல் ஆரம்பிக்கப்பட்டது அந்த மக்களின் வேண்டுகோளுக்கு அமைய நடைமுறைப்படுத்துவது நீதியான ஒன்றாகும்.

இதை நன்கு உணர்ந்து அமைச்சர்கள்,அதிகாரிகள் ஏன்தான் என்று இருந்து விடாது கெல்ஸி மஹா எளிய பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டம் தொடர்பில் உள்ளூர் விடயங்களை ஆராய்ந்து குடி தண்ணீர் பிரச்சினையால் அசுத்த நீரை குடிநீராக பருகி வரும் மக்களுக்கு நல்ல நீரை வழங்கி நன்மதிப்பை பெற வேண்டும் என கோரிக்கையை முன் வைத்தார்.

பிரிட்டன்

# பிரிட்டனில் 14 சதவீத மக்கள் உணவு பஞ்சத்தால் பாதிப்பு



பிரிட்டனில் பட்டினி பிரச்சனை தற்போது இயல்பான ஒன்றாக மாறிவிட்டதாக ஆய்வு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்துள்ளது. இது தொடர்பான சசெக்ஸ் பல்கலைக்கழகத்தின் IDS அமைப்பு ஆய்வு கூறுகையில், பிரிட்டனில் 14 சதவீத மக்கள் உணவு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டில் உணவு பெறுவதில் மக்களிடையே சமத்துவம் இன்மை மிக அதிகம் உள்ளதாகவும், 10 ஆண்டுகளாக இதை சரிசெய்ய தொண்டு அமைப்புகள் முயற்சித்து வருவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது. ஆனால், இது நீண்ட கால தீர்வு அல்ல. 10 ஆண்டுகளுக்கு முன் 100 உணவு வங்கிகள் மட்டுமே சேவை செய்த நிலையில், 2021இல் இந்த எண்ணிக்கை 2,000ஆக அதிகரித்தது. 2022 செப்டம்பர் புள்ளிவிவரப்படி 97 அலட்சம் மக்கள் உணவு பஞ்சத்திற்கு ஆளாகியுள்ளனர் என ஆய்வுத் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும், பிரிட்டனில் ஏழு பேரில் ஒருவர் பட்டினிக்கு ஆளாவதாக டிரசல் டிர்ஸ்ட் என்ற அமைப்பு நடத்திய ஆய்வு தகவல் தெரிவிக்கிறது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 7 சதவீதம் பேர் தொண்டு அமைப்புகளையே உணவுக்காக சர்ந்து இருப்பதாக புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. ரஷ்யா-உக்ரைன் இடையே நடைபெறும் போர் காரணமாக உலக நாடுகளின் உணவு சங்கிலி விநியோகம் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் உணவு நெருக்கடி தலைதூக்கியுள்ளது.

இங்கிலாந்து



## ஒரு பெண்ணை அடித்து உதைக்கும் 2 பெண்கள்


இங்கிலாந்தில் உள்ள பூங்காவில் இரண்டு பெண்கள் ஒரு இளம் பெண்ணை கொடூரமாக தாக்கும் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. என் தங்கைக்கு நிகழ்ந்திருக்கும் கொடுமையை பாருங்கள் என்று, இளம் பெண்ணின் அண்ணன் அந்த வீடியோவை ட்விட்டரில் பகிர்ந்துள்ளார்.

இந்த வீடியோ சமூல வலைத்தளங்களில் வைரலான நிலையில் அது குறித்து பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பூங்காவில் இளம் பெண் இத்தனை கொடுமைக்கு ஆளாக்கப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த மோசமான செயலில் ஈடுப்பட்ட இரண்டு பெண்களுக்கும் உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இத்தாலி

## 24 ஆண்டுகளில் 20 ஆண்டுகள் விடுமுறை எடுத்த ஆசிரியை



365 நாட்களும் பாடசாலைகள் நடைபெறுவதில்லை. விடுமுறைகள் மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் இந்தச் முழுமையாக பொருந்தும்.

பொது விடுமுறை நாட்களைக் கடந்து, தனி நபருக்கு உடல்நிலை சரியில்லை, நீண்ட மருத்துவ சிகிச்சை, வீட்டில் விசேஷம் என்று பல காரணங்களுக்காக விடுப்பு எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

ஆனால், இத்தாலியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரின் கதையை கேட்டால் நமக்கே வியப்பாக இருக்கிறது. கடந்த 24 ஆண்டுகளில் மொத்தமாக 4 ஆண்டுகள் மட்டும்தான் பள்ளிக்கு வந்திருக்கிறாராம். எஞ்சியுள்ள 20 ஆண்டுகளை விடுப்பிலேயே கழித்திருக்கிறார். உடல்நிலை சரியில்லை என்று விடுப்பு, கருத்தரங்கு, மாநாட்டில் கலந்து கொள்ள விடுப்பு என புதுப்புது காரணங்களில் கணக்கு, வழக்கு இல்லாமல் விடுமுறை எடுத்திருக்கிறார்.

புதுடெல்லி

## வீட்டின் மேல் பறந்த ட்ரோனால் பரபரப்பு

புதுடெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி வீடு அமைந்துள்ள பகுதியில் சந்தேகத்திற்குரிய வகையில் ட்ரோன் பறந்தது. பாதுகாப்பு படையினர் புதுடெல்லி காவல்துறையை அதிகாலை 5.30 மணிக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தனர்.


பிரதமரின் வீட்டின் மேல் ட்ரோன் பறந்தது தொடர்பாக புதுடெல்லி காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். புதுடெல்லி பொலிஸா ட்ரோனை தேடும் பணியில் ஈடுபட்டனர். இதுவரை ட்ரோன் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்ட பகுதியில் அதிகாலையில் ட்ரோன் பறந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.



உத்தரப் பிரதேசம்

## செல்பியால் சிக்கல்



கட்டுக்கட்டாக இருக்கும் 500 ரூபாய் நோட்டுக்களுடன் பொலிஸ் அதிகாரியின் குடும்பத்தார் செல்பி எடுத்துக்கொண்ட புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. இதைத் தொடர்ந்து அவர் தற்போது சிக்கலில் மாட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தின் உன்னாவ் மாவட்டத்தில் உள்ள காவல் நிலையம் ஒன்றில் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரியும் ஒருவர், அவரின் மனைவி மற்றும் 2 குழந்தைகள் அவர்கள் வீட்டில் தரையில் கட்டுக்கட்டாக பரப்பி வைத்திருந்த 500 ரூபாய் நோட்டுகளுடன் செல்பி புகைப்படம் ஒன்றை எடுத்து விளையாடியுள்ளனர்.

இந்த புகைப்படம் எப்படியோ லீக் ஆகி இணையத்தில் வைரலானது. அந்த புகைப்படத்தில் மொத்தம் 500 ரூபாய் நோட்டு கட்டுகள் 27 உள்ளன. அதன்படி, பணத்தின் மதிப்பு ரூ.14 .லட்சமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

இந்த பணம் காவலர் ரமேஷ் இலஞ்சமாக பெற்ற பணம் என்ற புகார் எழுந்துள்ள நிலையில், விவகாரம் குறித்து விசாரணை மேற்கொள்ள எஸ்.பி உத்தரவிட்டுள்ளார். மேலும், சர்ச்சையில் சிக்கிய ரமேஷ் ஆயுதப்படைக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பீகார்

## ஆணின் அந்தரங்க உறுப்பை பிளேடால் பதம்பார்த்த பெண்

பீகார் மாநிலம் பங்கா மாவட்டத்தைச் சேர்ந்த 20 வயது பெண் ஒருவருக்கு சமீபத்தில் திருமணமாகியுள்ளது. இந்த இளம் பெண்ணின் கணவர் வெளியே சென்ற நிலையில் வீட்டில் அவர் தனியாக இருந்துள்ளார்.

இரவு சுமார் 10 மணியான நிலையில், வீட்டின் கதவை பெண் தாழிட மறந்து உள்ளே இருந்துள்ளார். அப்போது திடீரென உள்ள நுழைந்த 27 வயது வாலிபர் ஒருவர் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார். இதனால் பதறிப்போன பெண் அந்த நபரை தடுக்க முயன்றுள்ளார். தடுக்க முடியாத நிலையில் ஒரு கட்டத்தில் அருகே இருந்த ஷேவிங் பிளேடால் அந்த நபரின் அந்தரங்க உறுப்பை அறுத்துள்ளார்.

அந்த நபர் காயமடைந்து துடித்து போகவே தப்பித்த பெண் அக்கம் பக்கத்தினரை அழைத்து கூக்குரல் எழுப்பினார். குரல் கேட்டு கிராமத்து மக்கள் ஓடுவதற்கு முன்பு அந்த நபர் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடினார்.



# உலகக் கிண்ணத்தில் இலங்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

புலவாயோவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிம்பாப்வேயுடனான சுப்பர் சிக்ஸ் போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே உலகக் கிண்ணத்துக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சிம்பாப்வே, டில்ஷான் மதுஷங்க (3), அணித்தலைவர் தசுன் ஷானக, மகேஷ் தீக்‌ஷன (4), மதீஷ பத்திரணவிடம் (2) குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 32.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஷோன் வில்லியம்ஸ் 56 (57) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் ஆட்டமிழக்காத 101 (102) ஓட்டங்களோடு 33.1 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மகேஷ் தீக்‌ஷன தெரிவானார்.

இரண்டாவது ஆஷஸ் டெஸ்டிலும்

## இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கெதிரான ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில், முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த அவுஸ்திரேலியா, லோர்ட்ஸில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியிலும் வென்று 2-0 என முன்னிலை பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

அவுஸ்திரேலியா: 416/10 (துடுப்பாட்டம்: ஸ்டீவன் ஸ்மித் 110, ட்ரெவிஸ் ஹெட் 77, டேவிட் வோர்னர் 66, மர்னுஸ் லபுஷைன் 47 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் டொங்க் 3/98, ஒலி றொபின்ஸன் 3/100, ஜோ றூட் 2/19, ஜேம்ஸ் அன்டர்சன் 1/53, ஸ்டுவர்ட் ப்ரோட் 1/99)


இங்கிலாந்து: 325/10 (துடுப்பாட்டம்: பென் டக்கெட் 98, ஹரி ப்ரூக் 50, ஸக் குறொலி 48, ஒலி போப் 42 ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/88, ட்ரெவிஸ் ஹெட் 2/17, ஜொஷ் ஹேசில்வூட் 2/71, நேதன் லையன் 1/35, பற் கமின்ஸ் 1/46, கமரொன் கிறீன் 1/54)

அவுஸ்திரேலியா: 279/10 (துடுப்பாட்டம்: உஸ்மான் கவாஜா 77 ஓட்டங்கள். பந்துவீச்சு: ஸ்டுவர்ட் ப்ரோட் 4/65, ஒலி றொபின்ஸன் 2/48, ஜொஷ் டொங்க் 2/53, பென் ஸ்டோக்ஸ் 1/26, ஜேம்ஸ் அன்டர்சன் 1/64)

இங்கிலாந்து: 327/10 (துடுப்பாட்டம்: பென் ஸ்டோக்ஸ் 155, பென் டக்கெட் 83 ஓட்டங்கள். பந்துவீச்சு: பற் கமின்ஸ் 3/69, மிற்செல் ஸ்டார்க் 3/79, ஜொஷ் ஹேசில்வூட் 3/80)

போட்டியின் நாயகன்: ஸ்டீவன் ஸ்மித்





## றொனால்டோவுடன் இணையும் டி கியா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் கோல் காப்பாளரான டேவிட் டி கியாவை சவுதி அரேபியக் கழகமான அல் நஸார் இலக்கு வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

யுனைட்டெட்டுடனான 32 வயதான டி கியாவின் யுனைட்டெட்டுடனான ஒப்பந்தமானது தற்போது முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த பருவகாலத்தில் டி கியாவின் முன்னாள் சக வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ அல்-நஸாரில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.

இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணத் தொடர்

## சம்பியனானது பாலமுனை அரபா விளையாட்டு கழகம்



நூருல் ஹுதா உமர்

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைஞர்கள் சபை வெற்றிக் கிண்ணத் தொடரில் பாலமுனை அரபா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பாலமுனை பொதுமைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஒலுவில் லெவிண் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே அரபா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரபா விளையாட்டுக் கழகம் ஐந்து ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 66 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய லெவிண் ஸ்டார் ஐந்து ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 64 ஓட்டங்களையே பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

அவுஸ்திரேலிய குரான் பிறீ

## வென்ற வெர்ஸ்டப்பன்

அவுஸ்திரேலிய குரான் பிறீயானது நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில் றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் வென்றார்.

இரண்டாமிடத்தை பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் பெற்றதோடு, மூன்றாமிடத்தை நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பனின் சக றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் பெற்றார்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 229 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியனான வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார். 148 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ,மெக்ஸிக்கோவின் பெரேஸ் காணப்படுவதுடன், மூன்றாமிடத்தில் 131 புள்ளிகளுடன் பெர்ணாண்டோ அலோன்ஸோ காணப்படுகின்றார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 04 ஜூலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.